# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

## මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 7.
**Tel: 11 4062180-190, 011 2565304, Fax: 011 4714460, 0114503001**.
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cmev.org

### ஜனாதிபதித் தேர்தல் 2015

**தேர்தல் தினத்து ஊடக அறிக்கை இல.02**

வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெற்றதை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி) கவனத்தில் கொள்கிறது, ஆனாலும் ஒரு சில பாரிய சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. வாக்களிப்பு தினத்தன்று இது வரை மூன்று வெடிப்புச் சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது சம்பவம் எமது முதலாவது அறிக்கையில் குறிப்பிட்டவாறு பருத்தித்துறையிலான ஒரு சம்பவமாகும். இரண்டாவது சம்பவம் ஒரு முஸ்லிம் வர்த்தகரின் இல்லத்தை இலக்காகக் கொண்டு பேருவளையிலிருந்தான ஒரு வெடிப்புச் சம்பவத்துடன் சம்பந்தப்படுகிறது. எவரும் காயமடையவில்லை என அறிவிக்கப்படுகிறது. வவுனியாவிலிருந்தான மூன்றாவது சம்பவம் கீழே விபரிக்கப் பட்டுள்ளது.

ஆளுங் கட்சி அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களினால் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படும் தாக்குதல், அச்சுறுத்தல் மற்றும் மிரட்டுதல் தொடர்பான பல சம்பவங்களையும் தே.வ.க.நி அவதானித்தது. சில சம்பவங்கள் கீழே தரப்பட்டுள்ளன –

**வவுனியா வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியே கைக்குண்டு வெடிப்பு**

நெடுங்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், வாக்களிப்பு நிலையங்கள் 32-33-34 இற்கு அருகே, பி.ப 2.30 அளவில் ஒரு கைக் குண்டு வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டது. வெடிப்புச் சம்பவமானது, வாக்களிப்பு நிலையத்தின் வாயிலிருந்து 50 மீ அருகே நிகழ்ந்தது. எவருக்கும் காயம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. பொலிசார் புலன்விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

**கம்பஹா மாவட்டத்தில் , அத்தனகல தேர்தல் தொகுதியில் ஐ.ம.சு.கூ பிரதி அமைச்சரினால் இரண்டு பெண்கள் தாக்கப்பட்டனர்**

ஐ.ம.சு.கூ பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன மற்றும் அவரது ஒரு ஆதரவாளர்கள் குழு யட்டியான கனிஷ்ட பாடசாலைக்கருகில் (வாக்களிப்பு நிலைய இல:51) ஜனவரி 8 ஆம் திகதி பி.ப 1.00 மணியளவில் இரண்டு பெண்களைத் தாக்கியதாக தே.வ.க.நி ஆல் ஒரு முறைப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டது. பிரதி அமைச்சர் குணவர்த்தனவும் அவரது ஆதரவாளர்கள் குழுவும் 7 வாகனங்களில் அப்பகுதிகளைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்ததாகவும் முறையிடப்பட்டது. இந்த தாக்குதல் தொடர்பாக தே.வ.க.நி மேலும் தகவல்களைப் பெறுவதற்கு உள்ளது.

**மிகிந்தலை வாக்களிப்பு நிலையத்திற்கருகே தாக்குதல்**

வடமத்திய அமைச்சர் எஸ்.எம். ரஞ்சித், அவரது ஆதரவாளர் சுமித் மற்றும் ஏனையவர்கள் ஏ.எச்.எம். விமலசிறி மற்றும் ஏனைய சிலரைத் தாக்கியதாக ஒரு முறைப்பாட்டை தே.வ.க.நி பெற்றுக்கொண்டது. தாக்குதலை மேற்கொண்டவர்கள் மரக்கட்டைகள் மற்றும் துப்பாக்கிகளுடன் காணப்பட்டனர். தாக்குதலுக்கு உள்ளான ஏ.எச்.எம். விமலசிறி சேனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். முறைப்பாடு எதுவும் பதியப்படவில்லை.

**அமைச்சர் ஆர்.எம். அஜாந்த குமார ஜயசிங்க அநுராதபுரம் கலாவெவவில் வாக்காளர்களை மிரட்டினார்**

அமைச்சர் ஆர்.எம். அஜாந்தக்குமார ஜயசிங்க அநுராதபுரம், கலாவெவவில் தம்புத்தேகம சமூக மண்டபத்திற்கு அருகே வாக்காளர்களை ஜனாதிபதி ராஜபக்சவிற்கு வாக்களிப்பதற்கு கேட்டு மிரட்டியதாக ஒரு முறைப்பாட்டை தே.வ.க.நி பெற்றுக்கொண்டது.

**இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் தாக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டார்**

அமைச்சர் அத்தாவுல்லாவின் (தேசிய காங்கிரஸ்) ஆதரவாளர்கள், அக்கரைப்பற்றில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான திரு.தல்லா என்பவரைத் தாக்கி அச்சுறுத்தியதாக தே.வ.க.நி ஒரு முறைப்பாட்டைப் பெற்றது. இது தொடர்பில், திரு.தல்லா பொலிஸில் ஒரு முறைப்பாட்டை மேற்கொண்டார்.

**திருக்கோவில் வாக்களிப்பு நிலையத்திற்குள் இனியபாரதி நுழைந்தமை தொடர்பான குற்றச்சாட்டுகள்**

இலங்கை சுதந்திரக்கட்சி ஏற்பாட்டாளர், இனியபாரதி காலை 11.45 அளவில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்குள் (இலக்கம் 79) நுழைந்ததாகவும், அவர், தன்னோடு எடுத்து வந்திருந்த மேலதிக வாக்குச் சீட்டுகளை வாக்குப் பெட்டிகளில் திணித்தாகவும் சம்பவத்தை கண்ணால் கண்ட சாட்சிகள் தே.வ.க.நி அறிவித்தனர். வாக்களிப்பு நிலையத்திலிருந்த தே.வ.க.நி கண்காணிப்பாளர் இனியபாரதி வாக்களிப்பு நிலையத்திற்குள் நுழைந்ததை உறுதிப்படுத்தினார், ஆனாலும் வேறு தகவல்கள் தற்போது தெரியாது. தேர்தல்கள் ஆணையாளர் சம்பவம் குறித்து தே.வ.க.நி இனால் அறிவிக்கப்பட்டு தற்போது நிலைமை விசாரணை செய்து வரப்பட்டு வருகிறது.

பிரச்சார நடவடிக்கைகள் தொடருகின்ற ஒரு சில சம்பவங்கள் குறித்தும் மற்றும் ஈ.பி.டி.பி இனரால் புரியப்பட்டதான வேறு மீறல்கள் பற்றி தே.வ.க.நி முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டது.

**ஈ.பி. டி.பி உறுப்பினர்களால் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றமை**

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி. டி. பி) உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன், யாழ்ப்பாண C வாக்களிப்பு பிரிவான, காங்கேசன்துறை தேர்தல் தொகுதியிலிருந்து சில வாக்காளர்களை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கு (வாக்களிப்பு நிலையம் 32) வாக்களிப்பதற்காக கூட்டிச் சென்றதாக ஒரு முறைப்பாட்டை தே.வ.க.நி பெற்றுக் கொண்டது.

**கிளநொச்சி வாக்களிப்பு நிலையங்களின் முன்னால் பிரச்சாரம் மேற்கொண்டமை**

காலை 10.15 அளவில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் பிரதேசசபை உறுப்பினர் ஒருவருடனும் மற்றும் சில சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் இணைந்து புனல்நீரவி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலை (வாக்களிப்பு நிலையம் 57) வாக்களிப்பு நிலையத்தின் வாசலில் நின்று, ஜனாதிபதி ராஜபகசவிற்கு வாக்களிக்கும்படி வாக்காளர்களை வலியுறுத்தியதாக, கிளிநொச்சியிலுள்ள தே.வ.க.நி அறிவித்தார்.

**புத்தளத்தில் வாக்காளர்களுக்கு அழுத்தத்தை பிரயோகித்தல்**

பாலாவி சிங்கள மகா வித்தியாலயத்திலிருந்து, வாக்களிப்பு நிலையம் 42, தேர்தல் பொறுப்பதிகாரி (SPO) வாக்களிக்கும் இடத்தின் அருகே நின்று கொண்டு மக்கள் தங்கள் வாக்குகளை எவ்வாறு அளிக்கின்றனர் என பார்த்துக் கொண்டு நின்றதாக காலை 9.15 அளவில் தே.வ.க.நி ஒரு முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்டது. தே.வ.க.நி கண்காணிப்பாளர் அவரிடம் இது பற்றி வினவிய போது, வாக்குச் சீட்டுகள் வாக்களிப்பு நிலையத்தை விட்டு வெளியே எடுத்துச் சென்று விடாமலிருப்பதைத் தான் கண்காணிப்பதாகக் கூறினார்.

**வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்கள் ஒரு தனியார்  பஸ் வண்டி மூலம் கூட்டிச் செல்லப்பட்டனர்**

8.05 அளவில்  ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பத்துப் பேர்களும் சிவில் பாதுகாப்பு படைகளும் முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள வாக்களிப்பு நிலையமான  கிரிபான்வெவ வித்தியாலயத்திற்கு (வாக்களிப்பு நிலையம் 87)  வழியிலுள்ள வாக்காளர்களை ஏற்றிச் சென்றதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது.  அவர்கள் பதிவிலக்கம் HT 6173 கொண்ட தனியார் பஸ் வண்டியில்  டி – ஷேர்ட்கள் அணிந்திருந்தவர்களால் ஏற்றிச் செல்லப்பட்டனர். தே.வ.க.நி கண்காணிப்பாளர்கள் புகைப்படச் சான்றுகளை வைத்துள்ளனர்.

**முல்லைத்தீவு, விஸ்வமடுவில்  வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியே  இராணுவ உத்தியோகத்தர் நின்று கொண்டிருந்தமை**

வன்னி தேர்தல் தொகுதியின் முல்லைத்தீவு மாவட்டத்தின், “C”  வாக்களிப்பு பிரிவு, வாக்களிப்பு நிலையம் (இல.54) விஸ்வமடு பாரதி வித்தியாலய மண்டப இல.2 இற்கு வெளியே ஒரு இராணுவ உத்தியோகத்தர் நின்று கொண்டிருப்பதாக காலை 8.35 அளவில் தே.வ.க.நி ஒரு முறைப்பாட்டை பெற்றுக் கொண்டது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது.  தற்போது,  தே.வ.க.நி  மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் ஊடக அறிக்கைகள் என்பவற்றை **www.cmev.org** எனும் இணைய தள முகவரியில் பார்வையிடலாம்.



கலாநிதி. பா. சரவணமுத்து
இணை அமைப்பாளர்